www.uplankajobs.lk

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் தரம் II இற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சிற்குரிய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் வெற்றிடமாகியுள்ள கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத் தினால் 2026,செத்தெம்பர் மாதம் நடாத்தப்படு மென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத் தளத்தில் “Our Services” இன் கீழ் காணப் படும் “Online Applications – Recruitment Exams/ E.B. Exams” ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (Online) முறையில் மாத்திரமே சமர்ப்பிப்பதற்கு முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026, யூன் மாதம் 08 ஆம் திகதியாகும். இணையவழி விண்ணப்பங்களைக் கையேற்றல்

2026, மே மாதம் 11ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு திறக்கப்படுவதுடன் 2026, யூன் மாதம் 08 ஆம் திகதி பி.ப. 09.00 மணிக்கு நிறைவடையும்.

1.2 தற்போது அரச / மாகாண அரச சேவையில் பணி யாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றை தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவர்களிடம் கையளித்தல் வேண்டுமென்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப் பத்தின் பிரதியொன்று மற்றும் சேவையை உறுதிப் படுத்தும் கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

1.3 விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதனை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் எந்தவொரு பாதக நிலைமையையும் விண்ணப்பதாரி ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

1.4 இந்தப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அட்டவணை - 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் அமைக்கப்படும் பரீட்சை மண்ட பங்களில் நடாத்தப்படும். அதற்கமைய பரீட் சைக்குத் தோற்றும் மாவட்டம் மற்றும் அதற்குரிய இலக்கத்தை முதலாவது மற்றும் இரண்டாவது விருப்பத்திற்கமைய விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டினுள் சரியாகக் குறிப் பிடுதல் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப் பித்த மாவட்டம் / மாவட்டங்களை பின்னர் மாற்று வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ஏதேனு மொரு பரீட்சை நிலையத்திற்கு போதுமான எண்ணிக்கை விண்ணப்பதாரிகள் இல்லா விட்டால் விண்ணப்பதாரியின் இரண்டாவது விருப்பத்திற் கமைய அல்லது கிட்டிய வேறொரு பரீட்சை நிலையத்தில் தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும். முன்மொழியப்பட்டுள்ள அனைத்து மாவட்டங் களிலும் அல்லது அதிக எண்ணிக்கையான மாவட்டங்களில் பரீட்சை நிலையங்களை அமைப் பதற்கு போதுமானளவு எண்ணிக்கை விண்ணப்ப தாரிகள் விண்ணப்பித்திருக்காவிட்டால் பரீட் சையை கொழும்பில் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை மேற் கொள்வார்.

1.5 இணையவழி (Online) விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை முறையில் அனுப்பப்பட்ட மென் பிரதியை செல்லுபடியாகும் விண்ணப்பமொன்றாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொண்டதாக / ஏற்றுக்கொள்ளவில்லையென முறைமைக்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்று (SMS) ஊடாக அல்லது மின் னஞ்சல் முகவரிக்கு (E-mail) அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பப்படிவத்தை பூரணப் படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப் பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை பூரணப் படுத்தும்போது அந்த அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதில் மேற் கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லு படியாகும் திருத்தமாக கருதப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும்.

(2) **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

2.1 இப் பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானத்திற்கு உட்படுதல் வேண்டும். தாங்கள் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புச் செலுத்தல் வேண்டும்.

2.2 அரச சேவை நியமனங்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் முதலாம் பிரிவின் II ஆம் அத்தியாயத்தின் 10 - 12 வரையான பிரிவுகளும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளும் ஏற்புடையதாக இருக்கும்.

2.3 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களம் சார்ந்த ஏனைய பணிப்புக்களுக்கும், அவ்வப்போது அரசாங்கத்தினால் வெளியிடப்படும் ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புக்களுக்கும் உட்படுதல் வேண்டும்.

(3) **பொதுவான தகைமைகள் :**

3.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

3.2 நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

3.3 சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்த வொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

3.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 35

வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2005/06/08 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1991/06/08 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமை யைப் பெறுகின்றனர்)

3.5 ஏதேனுமொரு மதத்தின் துறவற நிலையை வகிக்கின்ற எவருக்கும் இந்தப் போட்டிப் பரீட் சைக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது தோற்று வதற்கு அனுமதி இல்லை.

(4) **கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங் கப்படும் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

(5) **ஆட்சேர்ப்பு முறை:**

5.1 எழுத்து மூலப் போட்டிப் பரீட்சைக்கான நிபந்த னைகள்:

எழுத்து மூலப் பரீட்சையின் ஒவ்வொரு வினாத் தாளுக்கும் 40% புள்ளிகள் அல்லது அதனிலும் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்து அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் நிலவுகின்றவெற்றிடங்களின்எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

5.2 எழுத்து மூலப் போட்டிப் பரீட்சைக்கான பாடத் திட்டம்:
பரீட்சை 02 வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

1. கிரகித்தல் - நேரம் - 01 ½ மணித்தியாலம் - 100 புள்ளிகள்
2. நுண்ணறிவு - நேரம் - 01 ½ மணித்தியாலம் - 100 புள்ளிகள்

(சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்தப் புள்ளிகளில் 40% அல்லது அதனிலும் அதிக புள்ளிகளை விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.)

01. கிரகித்தல் :
இந்த வினாத்தாள் ஊடாக பரீட்சார்த்திகளுக்கு பல சிறிய வாசகங்கள் வழங்கப்படும். சில வாசகங்கள், அவற்றின் பொருளைஒரேவாக்கியத்தில்வெளிப்படுத்தும்வகையில் கொடுக்கப்படும். அடிக்கோடிட்ட சொற்களுக்கு விளக்கம் அளிக்குமாறு கேள்விகள் கேட்கப்படும். மேலும் சில வாசகங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகளுக்கு மாற்றுக் கூற்றுக்கள் முன்வைக்கப்படுவதுடன், அவற்றில் ஒன்று அந்த வாசகத்தின் உள்ளடக்கத்திற்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும். பரீட்சார்த்திகள் அதில் மிகவும் பொருத்தமான கூற்றைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். வேறு சில கூற்றுக்கள் தொடர்பில் பரீட்சார்த்திகளுக்கு பல கேள்விகள் முன்வைக்கப்படுவதுடன், அவற்றுக்கு சரியான பதிலை அளித்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பரீட்சார்த்தி அந்தக் கூற்றுக்களின் பொருளைப் புரிந்துகொள்ளும் விதத்தை சோதிப்பதற்காக இந்த வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

02. நுண்ணறிவு சோதனை:

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியிலான சிந்திக்கும் திறன், பகுப்பாய்வு சிந்தனை, தீர்மானமெடுக்கும் திறன் ஆகியவற்றை சோதிப்பதற்காக இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாக இருக்கும்.

5.3 தகைமைகளை சோதிப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

5.4 பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடாத்தப்படும். தமது விண் ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழியை மாற் றிக்கொள்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்தி பரீட்சையின்போது தோற்றுகின்ற அனைத்து வினாக்களுக்கும் ஒரே மொழியில் பதிலளித்தல் வேண்டும்.

5.5 பெறுபேறுகளை வெளியிடல்:

எழுத்து மூலப் பரீட்சையின் ஒவ்வொரு வினாத் தாளுக்கும் 40% புள்ளிகள் அல்லது அதனிலும் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண் ணப்பதாரிகளைத் தெரிவுசெய்து அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படும் பெறுபேறுகள் பட்டியலை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப் புவார்.

நியமன அதிகாரியின் இணக்கப்பாடு கிடைக் கப்பெற்றதன் பின்னர் அனைத்து விண் ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகளை தனிப் பட்ட வகையில் அறிவிப்பதற்கு அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைகள்

திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(6) **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்த) :**
10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் MN-05-2025 இன் கீழ் ரூ. 58,660-10x1,190-11x1,360 -15x1,670-110,570 ஆகும்.

(7) **பதவி உயர்வு நடைமுறை:**
கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்புடையதாக இருக்கும்.

(8) **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது நிகழ்நிலை முறைமையில் வழங்கப்படும் கீழ் குறிப்பிடப்படும் கட்டணம் செலுத்தல் முறையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கியினதும் கடனட்டை ஊடாக (Any Bank Credit Card)

II. இணையத்தளப் பரிவர்த்தனை வசதிகளைக் கொண்டுள்ள எந்தவொரு பற்று அட்டை ஊடாக (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

III. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறை ஊடாக (Online Banking Method of Bank of Ceylon)

IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையான்றினூடாக (Any Branch of the Bank of Ceylon).

குறிப்பு :

(அ) மேலே குறிப்பிடப்பட்ட முறைகள் ஊடாக கட்டணத்தை செலுத்தும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சையுடன் தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் செலுத்தப்பட்டமை தொடர்பாக குறுஞ்செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் செய்தி ஊடாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முழுமையாக செலுத்தப்பட வேண்டுமென்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட பணம் செலுத்தல் முறைகள் ஊடாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும்போது ஏற்படக்கூடிய பிழைகள் தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) எக்காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படவோ வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றப்படவோ மாட்டாது.

(9) **அரச கரும மொழிகள் கொள்கையை நடைமுறைப் படுத்தல்:**

18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கமைய பதவியைப் பொறுப்பேற்று 03 வருடங்களுக்குள் உரியஅரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(10) **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை, அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியல் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும். பரீட்சை ஆரம்பிக்கும் திகதியன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்ட பரீட்சை அனுமதிப்பத்திரத்தையே சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு கையொப்பம் உறுதிப்படுத்தப்படாத அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கின்ற விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(11) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முடிவின் அடிப்படையில் விண்ணப்பங்களை கையேற்பதற்கான இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் இணையவழியில் மாத்திரம் அனுப்பப்படும். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் இலங்கை பரீட்சைகள் திணைக் களத்தினால் அது பற்றி விண்ணப்பதாரிகளுக்கு வலைதள அறிவித்தலொன்றின் ஊடாக / குறுஞ்

செய்தியொன்றினூடாக அறிவிக்கப்படும். தனக் குரிய அனுமதிப்பத்தரம் கிடைக்கப்பெறாத விண் ணப்பதாரியொருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அது தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரித் தறிதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது தான் விணணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப் பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியன சரியாகக் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை வலைதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுதல் பயன்மிக்கதாக இருக்கும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதி செய்வதற்காக தம்மிடம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் போட்டோ பிரதி ஆகியவற்றை தம்மிடம் வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும். அனுமதிப்பத்திரத்தை பரீட்சித்து திருத்தங்கள் இருப்பின் நேரகாலத்துடன் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பதற்திற்கமைய குறித்த திருத்தங்களை மேற் கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/ நேர்முகப் பரீட்சையின்போது திருத்தத்திற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(12) பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திர மொன்று வழங்கப்பட்டமையானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

(13) பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் பரீட்சை மேற் பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியுமான வகையில் முகத்தை மூடாமலும் இலத்திரனியல் தொடர்பாடல் துணைப்பாகங்களை அணியாதிருப்பதனை உறுதிப் படுத்திக்கொள்வதற்கு முடியுமான வகையில் இரண்டு காதுகளையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக் கின்ற எவரையும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு அனுமதிக்கக் கூடாது. மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் உள்நுழைந்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதிருத்தல் வேண்டும்.

(14) பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும். அந்த சட்ட விதிகளை மீறினால் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்படுதல் வேண்டும். பரீட்சைப் பெறு பேறுகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

(15) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது இயைந்திராமை இருப்பதாகத் தெரியவரும் பட்சத்தில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி யிலான அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

தம்மிக்க ரணதுங்க,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
த.பெ. இல. 537,
கொழும்பு 07,
2026, ஏப்பிறல் 24.

**அட்டவணை - 1**

**பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட இலக்கத்தை கீழுள்ள பட்டியலிலிருந்து தெரிவு செய்யவும்.**

இந்தப் பரீட்சை கீழ் குறிப்பிடப்படும் மாவட்டங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் தாம் வசிக்கும் முகவரிக்கு மிகவும் அண்மையிலுள்ள மாவட்டத்தை தனது பரீட்சை மண்டபமாகத் தெரிவு செய்துகொள்ளல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாவட்டம் மற்றும் மாவட்ட

இலக்கத்தை கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைக்கமைய விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மாவட்டத்தை பின்னர் மாற்றிக்கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| *மாகாணம்* | *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|---|
| மேல் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| மத்திய | கண்டி | 04 |
| | மாத்தளை | 05 |
| | நுவரெலியா | 06 |
| தென் | காலி | 07 |
| | மாத்தறை | 08 |
| | ஹம்பாந்தோட்டை | 09 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 10 |
| | மன்னார் | 11 |
| | வவுனியா | 12 |
| | முல்லைத்தீவு | 13 |
| | கிளிநொச்சி | 14 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 15 |
| | அம்பாறை | 16 |
| | திருகோணமலை | 17 |
| வடமேல் | குருநாகல் | 18 |
| | புத்தளம் | 19 |
| வட மத்திய | அனுராதபுரம் | 20 |
| | பொலன்னறுவை | 21 |
| ஊவா | பதுளை | 22 |
| | மொணராகலை | 23 |
| சப்பிரகமுவ | இரத்தினபுரி | 24 |
| | கேகாலை | 25 |

05-38/1

---

www.uplankajobs.lk